# வில்லியம் கர்தினால் கோ அவர்களின் உயிர்ப்பு பெருவிழா 2025ன் வாழ்த்துமடலின் தமிழாக்கம்.

## ~உயிர்ப்பு பெருவிழா 2025~

### உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை

கிறிஸ்துவில் என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

**நாம் இப்போது நம்பிக்கையின் யூபிலி ஆண்டின் மத்தியில் இருக்கிறோம்.** வறுமை, நோய், காரணமின்றி ஏற்படும் துன்பங்கள், நாம் நேசிப்பவர்களின் மரணம், சுற்றுச்சூழல் பேரழிவுகள், பொருளாதார நெருக்கடிகள், போர் மற்றும் துன்புறுத்தல் போன்ற பல்வேறு காரணிகளின் போதும் உலகம் நம்பிக்கையை எதிர்நோக்கியே இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையிலும், மனிதகுலம் எப்பொழுதும் ஒரு சிறந்த எதிர்காலத்தை நம்பியே தொடர்ந்து வாழ்ந்து வருகிறது. நம்பிக்கை இல்லையெனில், மனிதன் மனிதநேயமும், சமூக முன்னேற்றத்திற்கான முயற்சிகளையும், நீதி மற்றும் அமைதிக்கான பணிகளையும் கைவிட்டுவிடுவான். ஆனால் இது வெறும் நம்பிக்கையாகவே தொடர்கிறது, ஏனெனில் ஒரு பெருந்தொற்றோ, உலகப் போரோ அல்லது மற்றொரு நிதி நெருக்கடி போன்ற பேரழிவோ எப்போது வேண்டுமெனினும் வந்து உலகின் அமைதியை சீர்குலைக்கலாம்.

**கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, நம்பிக்கை என்பது வெறும் மனப்பால் குடிப்பது அல்ல.** இது உலகில் அமைதி, செழிப்பு, முன்னேற்றம் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி நம்முடைய அனைத்து முயற்சிகளையும் நாம் செயல்படுத்தும் விதத்தை குறிக்கவில்லை. மாறாக, கிறிஸ்தவ நம்பிக்கை என்பது விசுவாசம் மற்றும் அன்பில் வேரூன்றியது. கடவுள் இந்த உலகத்தை நேசிக்கிறார் என்பதை அறிவது நமது நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. நமது இக்கட்டான வேளையிலும் கூட, எல்லா துன்பங்களையும், சோதனைகளையும் வெல்ல அவர் நமக்கு அருளைத் தருவார் என்றும், இந்த உலகத்தை அனைவருக்கும் ஏற்ற சிறந்த இடமாக மாற்ற தேவையான ஞானத்தையும் வழிகளையும் அவர் கொடுப்பார் என்றும் நாம் உறுதியாக நம்புகிறோம். அவரிடம் நாம் வைத்திருக்கும் இந்த உறுதியான விசுவாசமும் அவரது அருளுமே இறுதி வரை நிலைத்திருக்க நமக்கு மனஉறுதி அளிக்கிறது. ஆனால் இந்த விசுவாசத்தை நாம் எங்கே காணலாம்?

**நம்பிக்கை என்பது கிறிஸ்து இயேசுவில் கடவுள் நமக்குக் கொடுத்த அருளிலிருந்து வருகிறது.** இயேசுவின் வாழ்வு, வார்த்தைகள், செயல்கள் மற்றும் குறிப்பாக அவரது பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலம் இந்த அருளை நாம் காண்கிறோம். அநீதி, துன்பம் மற்றும் மரணத்தை அவர் சந்தித்தபோது, அவரது தந்தை மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை எப்படி உறுதியாக இருந்தது என்பதை நாம் பார்க்கிறோம். அவரது தந்தை அவரை ஒருபோதும் கைவிடமாட்டார் என்று அவர் அறிந்திருந்தார். கடவுளின் அரசை நிறுவும் பணியில் தோல்வியுற்றபோதும், அவரது சீடர்களால் கைவிடப்பட்டபோதும், அவரது தந்தை அமைதியாக இருப்பது போல் தோன்றியபோதும், எல்லாவற்றையும் அவர் அர்ப்பணித்தார் குறிப்பாக அவரது பணி உட்பட. அவரது தந்தை முடியாததையும் செய்வார் என்று அவர் நம்பினார். நாமும் தொலைந்துவிட்டதாக உணரும்போதும், தனிமையாக இருக்கும்போதும், நம் அன்புக்குரியவர்களாலும், நண்பர்களாலும், சக ஊழியர்களாலும், ஏன் கடவுளாலேயே கைவிடப்பட்டதாக உணரும்போதும், ஆழ்ந்த சோகத்திலும் மனச்சோர்விலும் நாம் அவரை உணர முடியாமல் இருக்கும்போதும், அவரது இரக்கத்தையும் அன்பையும் பற்றிக்கொள்ள இயேசு நம்மை

ஊக்குவிக்கிறார். கடவுள் மீது நாம் நம்பிக்கை வைத்திருக்கும் வரை, முடிவில்லாத எதிர்நோக்கு இருக்கிறது. நம்பிக்கை இல்லையென்றால், அது எதிர்நோக்கற்ற முடிவு.

**ஆண்டவரின் உயிர்த்தெழுதல் என்பது நமக்கு எல்லாமே நம்பிக்கையற்றதாகத் தோன்றும்போது, அவர் தனது மகிமையையும் ஒளியையும் வெளிப்படுத்துவார் என்று உறுதியளிக்கிறது.** குற்றவாளியாகக் கருதப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது மகனை தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு செய்வதன் மூலம், அவர் தனது மகனின் வார்த்தைகளையும் செயல்களையும் உறுதிப்படுத்தினார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவரை இறந்தோரிலிருந்து எழுப்புவதன் மூலம், வெறுப்பை விட அன்பு வலிமையானது, மரணத்தை விட வாழ்வு வலிமையானது என்பதை கடவுள் காட்டினார். அவரது உயிர்த்தெழுதலே நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை. நமது நம்பிக்கை இந்த மண்ணக வாழ்வில் மட்டுமல்ல, அடுத்து வரும் விண்ணக வாழ்விலும் உள்ளது. புனித பவுல், "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே. நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவர்களாவீர்கள். அப்படியானால், கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு இறந்தவர்களும் அழிவுக்குள்ளாவார்கள். கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும்விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம்" என்று கூறுகிறார்.(1 கொரிந்தியர் 15:17-19).

**அனைவருடனும் நாம் கிறிஸ்து இயேசுவின் வாழ்வின் நிறைவை அன்புடன் பகிர்ந்து கொள்ளவே அழைக்கப்பட்டிருக்கிறோம், ஏனென்றால் "வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்பதே அவர் வந்ததற்கான காரணம்** (யோவான் 10:10). கிறிஸ்துவில் உள்ள இந்த நம்பிக்கை தான் இவ்வுலகிலும் மறு உலகிலும் நமக்கு வாழ்வின் நம்பிக்கையைத் தருகிறது. நம்மை நேசிப்பவர்களுக்கு மட்டுமல்ல, அந்நியர்களுக்கும், ஏன் நம் எதிரிகளுக்கும் கூட நாம் அன்பை பகிர்ந்து வாழ முடியும். "கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது. ஏனெனில், ஒருவர் அனைவருக்காகவும் இறந்தார். அனைவரும் அவரோடு இறந்தனர். இது நமக்குத் தெரியும். " (2 கொரிந்தியர் 5:14f). எனவே, நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையை அளித்து, நன்மை செய்வது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்காக வாழும் ஒளியின் மக்களாக நாம் இருப்போம். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கொடுப்பதே, மற்றவர்களுக்கு நாம் கொடுக்கக்கூடிய மிகப்பெரிய பரிசு . நமக்காகத் தம் உயிரைக் கொடுத்த நல்ல மேய்ப்பரான அவர் மட்டுமே நம்மை வாழ்வின் முழுமைக்கு வழிநடத்த முடியும். புனித பவுல், "அவரால்தான் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம். அவரே நம்மை ஏற்புடையவராக்கித் தூயவராக்கி மீட்கின்றார்" (1 கொரிந்தியர் 1:30) என்பதை நமக்கு நினைவூட்டுகிறார்.

அல்லேலூயா, ஆண்டவர் உயிர்த்தெழுந்தார். அவர் நம் நம்பிக்கையும், நம் வாழ்வின் இருளில் ஒளியுமாய் இருக்கிறார். இனிய உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துகள் !

கிறிஸ்துவில் உங்கள் பிரியத்திற்குரிய,

✠ வில்லியம் கர்தினால் கோ

சிங்கப்பூர் பேராயர்

2025 ஏப்ரல் 20 அன்று வெளியிடப்பட்டது.